திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு கேளிக்கை வரியிலிருந்து விலக்கு அளிப்பதில்லை என்று சொன்னார்கள். அரசாங்கத்தினரால் பதிவு செய்யப்பட்ட சில அமைப்புக்கள், கல்லூரி வளர்ச்சி நிதி, உயர்நிலைப் பள்ளி வளர்ச்சி நிதி என்று பதிவு செய்யப்பட்ட அமைப்புக்கள் வளர்ச்சி நிதியின் பெயரால் மார்னிங் ஷோஸ், பெனிபிட் ஷோஸ் போடுவதற்கு அரசாங்கத்தினிடம் அனுமதி கேட்டால், அதற்கு அரசாங்கம் வரி விலக்கு அளிப்பதற்கு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நான் சொன்னது சித்திரைப் பொருட்காட்சியில் ஏற்பாடு செய்யப்பட்ட திரைப்படங்களுக்கு கேளிக்கைவரி விலக்கு இல்லை என்று சொன்னேன் அது போன்றவர்கள் மனுப் போடுவார்களேயானால், அதை அரசாங்கம் கவனிக்கும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, இப்பொழுது அரசாங்கத்தாரால் சில குறிப்பிட்ட நிகழ்ச்சிகளுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டு வருகிறது. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு வரி விலக்கு இருக்கிறது. ஸ்கூல் பங்ஷன்ஸ் நடத்தினால் அதற்கு விதிவிலக்கு இருக்கிறதா என்பதை வரையறுத்து அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பொது நிகழ்ச்சிகளுக்கென்று தனியாக மனுச் செய்வார்களேயானால், அதனுடைய நிலைமையை ஆராய்ந்து அரசு உத்தரவு பிறப்பிக்கும்.

Market study on sugar

* 685 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : THIRU S. N. CHITHAN : Will the Hon. Minister for Food and Commercial Taxes e pleased to state : Whether any market study regarding (i) the production output and the profit, (ii) the consumers, impact; and (iii) the price level has been made in this State after the partial de-control of sugar?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

திரு. ஆர். கருப்பையா : சர்க்கரையைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு ஆலையிலும் சர்க்கரை தேங்கிக் கிடக்கிறது என்ற காரணத்தினால், ஆலைக்கு கரும்பு அனுப்புகிறவர்களுக்கு பணம் கொடுக்கப்படவில்லை. டன் ஒன்றுக்கு ரூ. 10 தான் அட்வான்ஸ் கொடுக்கப்படுகிறது. முன்பு டன் ஒன்றுக்கு ரூ. 70 அட்வான்ஸ் கொடுக்கப்பட்டு வந்தது. இப்பொழுது ரூ. 10 தான் கொடுக்கப்படுகிறது. இதுபோன்ற நிலையை நீக்குவதற்கு தக்க நடவடிக்கை எடுத்து, டன் ஒன்றுக்கு ரூ. 50 அட்வான்ஸ் கொடுக்க அரசு வகை செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : வெளிமார்க்கெட்டில் விற்கப்படுகிற சக்கரையைப் பற்றிய கேள்வி இது. இருந்தாலும், அங்கத்தினர் கேட்பதற்குப் பதில் சொல்கிறேன். சர்க்கரை தேங்கிக் கிடக்கிறது என்பதற்காகத் தான், அவ்வப்பொழுது சர்க்காரில் ஒதுக்குகிற லெவி சர்க்கரையை அந்தந்த மாதம் விற்றுவிடவேண்டும் என்று உத்தரவு பிறப்பித்திருக்கிறோம்.